ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2460/03 - 2025 ඔක්තෝබර් මස 28 වැනි අඟහරුවාදා - 2025.10.28

2460/03 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 09/03/01/2022/04.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/9/2021/PC/418.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் திருத்தச் சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், திவுலபிட்டிய பிரதேச செயலகப் பிரிவின் இல. 50, பலகல்லை மேற்கு கிராம அலுவலர் பிரிவில் பலகல்லை கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் தலைமையதிபதியினால் 2025.09.16 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட எல்லைத் திட்ட இல. 510006 (பிரிவு 7) மற்றும் பத்திரம் இல. 17 இல் துண்டு இலக்கங்களாகக் காட்டப்பட்டுள்ள 0.4060 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட பின்வரும் காணியின் விபரங்கள் பின்வருமாறு.:

01. **துண்டு இல. 01**

காணியின் பெயர்: வெரெல்லகஹலந்த; விபரம்: வீட்டுத்தோட்டம்; உரிமை கோருபவர்: ஜயக்கொடி ஆரச்சிகே கித்சிறி ஜயக்கொடி; சட்ட ஏற்பாடுகள் மற்றும் அளவீட்டிற்கான காரணம்: காணி எடுத்தற் சட்டத்தின் கீழ் எடுப்பதற்காக; விஸ்தீரணம்: 0.4060 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 26 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு திவுலபிட்டிய பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 19 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டபிள்யூ. டபிள்யூ. எம். டீ. குமாரி,
பிரதேச செயலாளர்,
திவுலபிட்டிய.

பிரதேச செயலகம்,
திவுலபிட்டிய,
2025, ஒற்றோபர் 24.

EOG 10 - 0256

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.